செய்திச் சுருள்

துறையூரில் காங்கிரஸார் மெழுகுவர்த்தி ஏந்தி பேரணி

துறையூர், ஜூலை 27: 'நீட்' தேர்வு ரத்து, நீட்டுக்காக போராடிய மாணவர்களின் வழக்கை ரத்து செய்ய வலியுறுத்தி துறையூரில் காங்கிரஸ் கட்சியினர் திங்கள்கிழமை மெழுகுவர்த்தியுடன் பேரணி சென்றனர்.

பேரணிக்கு அக் கட்சியின் துறையூர் நகரத் தலைவர் ராமநாதன் தலைமை வகித்தார். மாவட்டத் துணைத் தலைவர் கருணாகரன், மாவட்ட பொருளாளர் நல்லசேகர், முன்னாள் மாவட்ட பொதுச்செயலர் சரவணன் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

பேரணியானது, துறையூர் பேருந்து நிலையத்தில் தொடங்கி திருச்சி சாலை, பெரிய கடை வீதி வழியாக பாலக்கரையில் நிறைவடைந்தது. இதில் துறையூர், உப்பிலியபுரம், மண்ணச்சநல்லூர், தொட்டியம், லால்குடி, காட்டுப்புத்தூர், முசிறி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் பங்கேற்று மெழுகுவர்த்தி ஏந்தி சென்றனர்.

சந்தானம் வித்யாலயா பள்ளியில் ஏபிஜே அப்துல் கலாமுக்கு அஞ்சலி



ஏவுகணை வடிவில் நின்று அப்துல் கலாமுக்கு திங்கள்கிழமை அஞ்சலி செலுத்திய திருச்சி சந்தானம் வித்யாலயா பள்ளி மாணவர்கள்.

திருச்சி, ஜூலை 27: திருச்சி சந்தானம் வித்யாலயா மேல்நிலைப் பள்ளி சார்பில் முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாமுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு திங்கள்கிழமை பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பள்ளியின் செயலர் கோ. மீனா தலைமை வகித்தார். பள்ளியின் தலைமை செயலதிகாரி கு. சந்திரசேகரன், இயக்குநர் எஸ். அபர்ணா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில், மாணவர்கள் ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் வாழ்க்கை வரலாறு, சாதனைகள், சிறப்புகள், நாட்டுக்கு அவரது பங்களிப்புகளை எடுத்துரைத்து உரை நிகழ்த்தினர். அப்போது, ஒரு சிறப்பு அஞ்சலியாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பள்ளி மைதானத்தில் ஒன்று கூடி, இந்தியாவின் விண்வெளி மற்றும் ஏவுகணைத் திட்டங்களுக்கு அப்துல்கலாம் ஆற்றிய குறிப்பிடத்தக்க பங்களிப்பைக் குறிக்கும் வகையில் ஒரு ராக்கெட் டின் வடிவத்தை உருவாக்கினர்.

அந்த வடிவத்தில், மரியாதை மற்றும் நினைவின் அடையாளமாக 'சந்தானம் வித்யாலயா - நாங்கள் டாக்டர் கலாமை நினைவுகூர்கிறோம்' (SANTHANAM VIDHYALAYA FONDLY REMEMBERS DR.KALAM) என்ற வாசகங்களும் இடம் பெற்றிருந்தன. இதில், ஆசிரியர்களும் தேசியக் கொடியை ஏந்தி, பங்கேற்றனர். முன்னதாக நிகழ்வில், பள்ளியின் முதன்மையர் கணேஷ், முதல்வர் பத்மா சீனிவாசன், துணை முதல்வர்கள் ரேகா, ஸ்ரீபல்லவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கொங்குநாடு கல்வி நிறுவன வளாகத்தில் அப்துல் கலாம் நினைவு தினம் அனுசரிப்பு

முசிறி, ஜூலை 27: திருச்சி மாவட்டம், தொட்டியம் கொங்குநாடு கல்வி நிறுவன வளாகத்தில் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் நினைவு தின அனுசரிப்பு நிகழ்வு திங்கள்கிழமை நடைபெற்றது.

இக் கல்வி நிறுவன வளாகத்தில் நிறுவன தலைவர் பி.எஸ்.கே.ஆர். பெரியசாமி பேசியதாவது: அப்துல் கலாம் அவர்கள், கனவு காணுங்கள் அந்தக் கனவுகளை நனவாக்கும் வகையில் இளைஞர்கள் உழையுங்கள் எனும் சிந்தனையையும், எளிமை, நேர்மை, அறிவியல் முன்னேற்றம் மற்றும் இளைஞர்களின் முன்னேற்றம் ஆகியவற்றிற்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்தார். ஒவ்வொரு இந்தியருக்கும் ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறார். அவரது உயர்ந்த சிந்தனைகள், நாட்டுப்பற்று மற்றும் கல்வி மீதான அர்ப்பணிப்பு என்றும் நமக்கு வழிகாட்டியாக உள்ளது என்றார்.

இந்நிகழ்வில் பொறியியல் கல்லூரி முதல்வர் அசோகன், பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் அய்யாதுரை, கல்வியியல் கல்லூரி முதல்வர் நாகராஜன், கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திருவெறும்பூரில் நிரந்தர ஆம்புலன்ஸ் வசதி தேவை: பொதுமக்கள் எதிர்பார்ப்பு

திருச்சி, ஜூலை 27: சாலை விபத்துகள், தொழிற்சாலை விபத்துகள் மிகுந்த திருவெறும்பூரில் நிரந்தர 108 ஆம்புலன்ஸ் இல்லாததால், அவசர சிகிச்சைகளைப் பெற முடியாமல் மக்கள் அவதிக்குள்ளாகின்றனர்.

திருச்சி மாவட்டம், திருவெறும்பூர் பகுதி தொழிற்சாலைகளில் மட்டும் ஆயிரக்கணக்கானத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். நெரிசல் மிகுந்த சாலையாகவும், அதிகளவில் விபத்துகள் நடைபெறும் சாலையாகவும் அறியப்படும், திருச்சி – தஞ்சை தேசிய நெடுஞ்சாலையும் திருவெறும்பூர் வழியாகவே செல்கிறது.

நிரந்தர ஆம்புலன்ஸ் இல்லைஃ ஆனால் விபத்துகளை அதிகளவில் சந்திக்கும் சாலையைக் கொண்ட திருவெறும்பூர் பகுதிக்கென தனியாக நிரந்தர ஆம்புலன்ஸ் வசதி இல்லை என அப்பகுதி மக்கள் புகார் கூறுகின்றனர்.

தடுக்க முடியாத உயிரிழப்புகள்ஃ திருவெறும்பூரில் உள்ள தொழிற்சாலைகளில் விபத்துகளில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள், சாலை விபத்துகளில் காயமடைந்தோர், பிரசவம் மற்றும் அவசர சிகிச்சைகள் தேவைப்படுவோர் அழைத்தால் துவாக்குடி அரசு மருத்துவமனை அல்லது நவல்பட்டு அரசு ஆரம்ப சுகாதார



நிலையம் அல்லது திருச்சியிலிருந்துதான் ஆம்புலன்ஸ் வர வேண்டியுள்ளது.

மேற்கண்ட பகுதிகளில் இருந்து திருவெறும்பூருக்கு ஆம்புலன்ஸ் வர குறைந்தபட்சம் அரை மணி நேரம் முதல் 2 மணி நேரம் வரை ஆகிறது. அதற்குள் உயிரிழப்பு என்பது தடுக்க முடியாத ஒன்றாக மாறிவிடுகிறது.

தனியார் ஆம்புலன்ஸ்ஃ இதனால் அதிக கட்டணம் கொடுத்துச் செல்லும், தனியார் ஆம்புலன்ஸ் சேவையையே நாட வேண்டியுள்ளது.

குறிப்பாக, கிராமப்புறங்களில் இருந்து கர்ப்பிணிகள், முதியவர்கள், பெண்கள், குழந்தைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் அவசர சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்குச் செல்ல நிரந்தர 108 ஆம்புலன்ஸ் இல்லாததால் மிகுந்த காலதாமதமாகிறது என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

'கோல்டன் ஹவர்' சிகிச்சைஃ இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் கே. ராம்மோகன், சாந்தசீலன் ஆகியோர் கூறியதாவது:

துவாக்குடி, நவல்பட்டு பகுதியில் உள்ள ஆம்புலன்ஸ்கள் பெரும்பாலும் கர்ப்பிணிகளின் அவசர சிகிச்சைக்காக பயன்படுத்தப்படுகின்றன. இதனால் திருவெறும்பூர் பகுதிக்கு ஆம்புலன்ஸ் சேவை கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டு, சாலை மற்றும் தொழிற் சாலை விபத்துகளில் அவசர சிகிச்சை தேவைப்படுவோருக்கான 'கோல்டன் ஹவர்' எனப்படும் உடனடி சிகிச்சை கிடைக்காமல் உயிரிழப்பு என்பது சாதாரண ஒன்றாகிவிட்டது.

எனவே, மக்களின் உயிர்களை காப்பாற்றும் வகையில், திருவெறும்பூரில் நிரந்தரமாக ஆம்புலன்ஸ் ஒன்றை நிறுத்தி, 24 மணி நேரமும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

கோரிக்கை வந்தால் நடவடிக்கைஃ இதுகுறித்து திருச்சி மாவட்ட 108 ஆம்புலன்ஸ் சேவையின் மாவட்ட மேலாளர் எம். உதயநிதி கூறுகையில், திருவெறும்பூர் பகுதியில் நிரந்தர ஆம்புலன்ஸ் சேவை கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை.

அப்படி ஏதும் மனுவோ அல்லது உயரதிகாரிகளின் அறிவுறுத்தல்களோ வந்தால், நிரந்தர ஆம்புலன்ஸ் சேவை வழங்கப்படும் என்றார்.

விவசாயிகள் சங்கத் தலைவர் அய்யாக்கண்ணு வீட்டுக் காவலில் சிறைவைப்பு



திருச்சியில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கத் தலைவர் பி. அய்யாக்கண்ணுவிடம் திங்கள்கிழமை பேச்சு நடத்திய போலீஸார்.

திருச்சி, ஜூலை 27: சென்னை தலைமைச் செயலகம் முன்பு போராடுவதாக அறிவித்திருந்த தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் பி. அய்யாக்கண்ணுவை போலீஸார் திருச்சியில் ஞாயிற்றுக்கிழமை இரவு வீட்டுக் காவலில் சிறை வைத்தனர்.

தமிழக விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் தள்ளுபடி செய்ய வலியுறுத்தியும், கர்நாடக மாநில அரசு மேக்கேதாட்டுவில் அணை கட்டுவதை கண்டித்தும், காவிரி ஆற்றில் தமிழகத்துக்குரிய காவிரி நீரை திறந்து விடாததை கண்டித்தும், உச்சநீதிமன்றமும் காவிரி நடுவர் மன்றமும் உத்தரவிட்ட பின்பும் உத்தரவை செயல்படுத்தாத கர்நாடக அரசை கண்டித்தும், சென்னை தலைமைச் செயலகம் சென்று போராட்டம் நடத்த உள்ளதாக பி. அய்யாக்கண்ணு அறிவித்திருந்தார்.

இதையறிந்த திருச்சி போலீஸார், ஞாயிற்றுக்கிழமை இரவு திருச்சி அண்ணாமலை நகர், மலர் சாலையில் உள்ள அய்யாக்கண்ணுவின் வீட்டுக்குச் சென்று, அவரை வீட்டுக்காவலில் சிறை வைத்தனர்.

விடுவிப்புஃ தொடர்ந்து திங்கள்கிழமை முற்பகலில் காவல்துறை உயரதிகாரிகளின் சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பிறகு, வீட்டுக்காவலில் இருந்து அவர் விடுவிக்கப்பட்டார். தொடர்ந்து, போலீஸ் பாதுகாப்புடன் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தலைமைச் செயலகம் முன்பு போராட்டம்ஃ சென்னையில் தலைமைச் செயலகம் முன்பு பி. அய்யாக்கண்ணு தலைமையில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டபடி காத்திருப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொப்பம்பட்டியில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

துறையூர், ஜூலை 27: கொப்பம்பட்டி ஊராட்சி அலுவலகம் முன்பு மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் உப்பிலியபுரம் ஒன்றியச் செயலர் சரவணன் தலைமை வகித்தார். கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மாநில அரசுக்கு எதிராக கோஷமிட்டனர்.

அதே போல, விவசாயி பயன்படுத்தும் கருவிகள் பட்டியலில் டிராக்டர்களை இணைக்கவேண்டும். விவசாயிகள் டிராக்டர்களுக்கு மானிய விலையில் டீசல் வழங்க வேண்டும் என்று கோரி மத்திய அரசைக் கண்டித்து முழக்கமிட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் தளுகை ரமேஷ், உப்பிலியபுரம் சிபிஐ ஒன்றிய செயலர் மருதை, மாவட்டக் குழு சந்திரசேகர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

வழக்குரைஞர் தூக்கிட்டுத் தற்கொலை

திருச்சி, ஜூலை 27: திருச்சியில் பயிற்சி வழக்குரைஞர் திங்கள்கிழமை தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டது தொடர்பாக போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி மேலகல்கண்டார்கோட்டையைச் சேர்ந்தவர் த. ஹரிராமசந்திரன் (27), பயிற்சி வழக்குரைஞர். இவருடைய மனைவி கடந்த ஒன்றரை மாதத்துக்கு முன்பு பிரசவத்துக்காக மதுரையில் உள்ள அவரது தாய் வீட்டுக்குச் சென்றுள்ளார். குழந்தை பிறந்து ஒன்றரை மாதமாகிறது. இந்நிலையில், குழந்தை பிறந்து ஒரு மாதம் கழித்து ஹரிராமசந்திரன் மனைவியை அழைக்கச் சென்றுள்ளார். அப்போது, அவர் ஆடி மாதம் முடிந்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனால், மன உளைச்சலில் இருந்து வந்த ஹரிராமசந்திரன், தங்கள்கிழமை வீட்டில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொன்மலை போலீஸார், அவருடைய சடலத்தை மீட்டு உடற்கூராய்வுக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து விசாரிக்கின்றனர்.

SMFG Grihashakti

SMFG இந்தியா ஹோம் :.பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

பெருநிலுவன அலுவலகம்: 503 & 504, 5,ஆவது தளம், G-பிளாக், இன்ஸ்பயர் BKC, BKC பிரதான சாலை, பத்ரா குர்லா வளாகம், பந்த்ரா (கி), மும்பை-400051.
பதிவு அலுவலகம்: காமர்சோன் IT பார்க், டவர் B, 1 ஆவது தளம், எண் 111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை- 600 116, தமிழ்நாடு.

அசையா சொத்திற்க்கான சுவாதீன அறிவிப்பு (பிற்சேர்க்கை IV) (விதி 8(1))

இப்படியும், இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், **SMFG இந்தியா ஹோம் :.பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**-என்ற ஒரு வீட்டுவசதி நிதி நிறுவனத்தின், [தேசிய வீட்டுவசதி வங்கியில் (முற்றிலும் இந்திய ரிசர்வ் வங்கிக்கு சொந்தமானது) முறையாக பதிவு செய்யப்பட்ட நிறுவனம்) (இனிமேற்கொண்டு "**SMHFC**" என்றே அழைக்கப்படும்) பிணைக்கப்படாத நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 (2002 ம் வருடத்தின் 54 வது சட்டம்) ன் கீழான அதிகாரப்பூர்வ அலுவலராகவும், மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(12) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 3 ன் கீழ் தனக்கு வழங்கப்பெற்ற அதிகாரத்தினை செயலுறுத்தியும், இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட கடன்தார்களுக்கு மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13(2) ன் கீழ், இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட தேதிய கோரிக்கை அறிவிப்பை அனுப்பியதையடுத்து, அவ்வறிவிப்பில் குறிப்பிட்டுள்ள மற்றும் இதன் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைத்தொகையை மேற்சொன்ன அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச்செலுத்தக் கோரினார். கடன்தார்கள் அத்தொகையை திருப்பிச் செலுத்த தவறியமையால், இந்த அறிவிப்பு மூலம் கடன்தார்கள் மற்றும் பொதுமக்களுக்கு தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், இதன் கீழ் விவரிக்கப்பட்ட சொத்துக்களை மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 13 உட்பிரிவு (4) - உடன் படிக்க - பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 ன் படி, தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை செயலுறுத்தி, இதன் கீழ்க்குறிப்பிடப்பட்ட தேதியன்று **சுவாதீனம் எடுத்துள்ளார்.** குறிப்பாக இதன் மேற்குறிப்பிட்டுள்ள கடன்தார்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர், இச்சொத்துக்களுடன் எந்தவொரு வில்லங்கமும் ஏற்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கப்படுவதுடன், அவ்வாறு அச்சொத்துக்களின் மீது ஏற்படுத்தப்படும் எவ்விதமான வில்லங்கமும், **SMHFC** - க்கு செலுத்தப்பட வேண்டிய இதன் கீழ்கண்ட நிலுவைத்தொகை மற்றும் மேற்கொண்டு வரும் வட்டி ஆகியவற்றிற்கு கட்டுப்பட்டது.

வ. எ. எண்.	கடன்தார்(கள்) / ஜாமீன்தார்கள் பெயர் & கடன் கணக்கு எண்	அடமான சொத்துக்கள் விபரம் (அசையா சொத்து)	கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை	சுவாதீன தேதி
1	LAN - 604039511487213 1. தாமரை செல்வன் வரதராஜ் 2. பத்மாவதி V.	i) சர்வே எண். பழைய சர்வே எண். 245/2, உட்பிரிவுக்கு பிறகு புதிய சர்வே எண். 245/2A., இதற்கானபுதிய உட்பிரிவு சர்வே எண். 245/2A1A, ii) வருவாய் ஆவணத்தின் படி சர்வே எண். 245/2A, iii) மொத்த பரப்பு 2180 சதுர அடி (அல்லது) 202.52 சதுர மீட்டர், iv) கதவு எண். (சொத்துவரி படி.) 3/65, v) அமைவிடம் அதாவது, இடத்தின் பெயர் : கிராமம், நகரம், பகுதி, சார் பதிவு மாவட்டம் போன்றவை, ஆதிக்குடி கிராமம், லால்குடி தாலுக்கா, அரியலூர் பதிவு மாவட்டம், லால்குடி சார்பதிவு மாவட்டம், 2180 சதுர அடி அல்லது 202.52 சதுர மீட்டர் இடம் மற்றும் கட்டிடத்துக்கானஎல்லைகளாவன பின்வருமாறு: கிழமேல் செங்கரையூர் சாலைக்கு - **வடக்கு**, மாரியம்மன் நிலத்துக்கு - **தெற்கு**, தென்வடல் பொது பாதைக்கு - **கிழக்கு**, சரவணன் நிலத்துக்கு - **மேற்கு** மற்றும் அதனுடன் கூடிய அனைத்து வழி வசதி மற்றும் பாதை உரிமைகள்.	15.05.2026 11.05.2026ம் தேதிமின் படி, ரூ.15,05,619.31 (ரூபாய் பதினைந்து இலட்சத்து ஐந்தாயிரத்து அறுனூற்று பத்தொன்பது மற்றும் பைசா மும்பத்து ஒன்று மட்டும்)	23.07.2026

ஒம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர்,
SMFG இந்தியா ஹோம் :.பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

இடம்: திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு.
நாள்: 23.07.2026

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House, P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பதுயாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கிழக்கண்ட கிளைகளில் 17.08.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பினறி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

அரியலூர், 0117200700041715, 1828, 3060, 3061, 0117200730008778, ஜெயங்கொண்டசோழபுரம், 0123700700045911, 6803, 8845, 1344, 1348, 0123700730038013, 0539, 0541, கரூர், அரவக்குறிச்சி கரூர், 0127090700033178, 3898, 4812, 4837, 4839, 4896, 5022, 5834, 7072, 0127090730016322, 6323, 6632, 2143, 2144, 2145, 2146, சர்ச் கார்னர் கரூர், 0126130700029110, 9647, 0868, 0126130730024947, 5959, 6057, காந்திகிராமம் கரூர், 0124910700032170, 3058, கரூர், 0101290700051942, 0101290730020402, கரூர் திருச்சி ரோடு, 0122160700031843, 2182, காவேரி நகர் குளித்தலை, கரூர், 0116140700036078, 6295, 7269, 8802, 0116140730033098, கிருஷ்ணராயபுரம், 0129350730018041, பள்ளப்பட்டி கரூர், 0125090700042371, 2998, 3447, 5411, பசுபதிபாளையம் கரூர், 0124240700035877, 8736, 9380, 9425, 0701, 0124240730037035, புலியூர் கரூர் , 0132650700026337, 8123, 0132650730019161, தாந்தோணிமலை கரூர், 0120060700052988, 3015, 5329, வேலாயுதம்பாளையம் கரூர், 0120990700033335, 0120990730031010, நாகப்பட்டினம், மயிலாடுதுறை, 0136200700013469, 3472, 3495, 3592, 0136200730010650, 1950, 1953, 1954, 0140, நாகப்பட்டினம், 0116230700040991, 1262, நீல தெற்கு வீதி, 0129640700025656, 8567, 0183, 0129640730027447, 0270, சீர்காழி, 0112720700055834, 6947, 0112720730008272, 8417, 0446, 0447, வேதாரண்யம், நாகப்பட்டினம், 0123390700037104, 7230, 7863, 0123390730030641, 0642, 0643, பெரம்பலூர், பஜார் வீதி ஜெயங்கொண்டசோழபுரம், 0102650700797991, 0399, 0102650730020262, 3503, 6240, 6241, 6242, 6243, பெரம்பலூர், 0116560700051385, 1811, 3837, 3968, 3965, 3986, 4365, 4646, 4902, 4910, 6187, 6190, 6196, 0116560730016295, 1766, வெங்கடேசபுரம் பெரம்பலூர், 0122310700030195, 1322, 1379, 1482, 1646, 1781, 2313, 2358, 2447, 2461, 0122310730018075, 8076, 8078, 8079, 8081, 8082, 8086, 8088, 0368, 0369, துக்கோட்டை, ஆலம்குடி , 0128240700044126, 4445, அரீமளம் புதுக்கோட்டை, 0132080700020331, 0694, 1670, 1703, 2197, 3043, 3044, 0132080730010154, 2193, 2196, இழுப்பூர், 0126930700053720, 4151, 5168, 5255, 0126930730008032, கரம்பைக்குடி புதுக்கோட்டை, 0127790700062394, 2397, 0127790730055364, கீரமங்கலம், 0133510700025629, 0133510730035286, கீரனூர், 0115800700052112, 2630, 0115800730010384, 0431, வடக்கு மெயின் ரோடு புதுக்கோட்டை, 0126640700033283, 3284, 0126640730025871, பொன்னமராவதி, 0124470700025412, 5527, 0124470730010181, 0785, புதுக்கோட்டை ஆலங்குடி ரோடு, 0114610700043281, 3683, 4640, தெற்கு 4வது வீதி புதுக்கோட்டை, 0127730700046636, 7435, 0127730730019137, தஞ்சாவூர், ஐயம்பேட்டை தஞ்சாவூர், 0132130700067039, 8696, 0132130730017443, 3341, 3343, 3344, 3345, 3347, ஜே எஸ் நகர் கும்பகோணம், 0103070700750435, 2331, 3202, 0103070730013086, 5660, 5664, 0202, காவேரி நகர, தஞ்சாவூர், 0116310700046199, 7738, 8576, 9588, கும்பகோணம், 0131080730013103, நாகேஸ்வரம் தெற்கு வீதி கும்பகோணம், 0129770700025496, 0316, ஓரத்தநாடு தஞ்சாவூர், 0129600700047683, 8972, 0129600730023892, 4413, 5200, 5452, 5714, 7245, பாபநாசம், 0102360700758719, 0205, 0102360730012312, பட்டுக்கோட்டை, 0112290700043480, 4820, தஞ்சாவூர், 0102900700056168, 7378, 8076, 8158, 0102900730027292, 1739, 1741, 1742, 1743, 1744, 1745, 1746, 1747, திருநாகேஸ்வரம் தஞ்சாவூர், 0121030700047979, 9236, 0121030730012982, 2983, 2984, 2987, 3003, 0342, 0355, திருப்பணந்தல் , 0121670700050483, 0121670730008101, 1596, 1597, 1601, 1602, 1603, திருவையாறு, 0101890700755824, 7040, 0101890730015093, திருவாரூர், கூத்தநல்லூர், 0130900700042584, 3893, மன்னார்குடி, 0102080700769743, 0173, நிடமங்கலம், 0101870700757567, 7587, 7640, 8457, 0101870730013592, திருத்துறைப்பூண்டி, 0131190700036168, 7310, 0131190730024501, திருவாரூர், 0101850700758381, 9060, 0101850730020767, 2481, 3197, கூஜுகீஇஜுகீஅகஅஂஂஜு, ஈ வி ஆர் ரோடு திருச்சி, 0108980700055351, 5359, 0108980730014064, 4250, 8023, பாலக்கரை, 0113180700039626, 0113180730013760, பேட்டவைதலை திருச்சி, 0128750700024184, உறையூர் திருச்சி, 0109720700061908, 3373, 4007, 4057, 5373, 0109720730019781, 1518, 5489, திருச்சி, சத்திரம் திருச்சி, 0103470700053716, 4298, 5405, 0103470730014579, டால்மியாபுரம் திருச்சி, 0116780700038875, 9617, 0256, 0335, 0651, 0773, 0825, 0859, 1360, 1976, கே கே நகர், திருச்சி, 0122470700030338, 1490, 0122470730014204, கருமண்டபம், திருச்சி, 0125230700025843, 7492, 0125230730017547, காட்டிப்பத்தூர், 0126360700049150, 9717, 1537, 0126360730025985, 8927, லால்குடி திருச்சி, 0116490700067089, 7090, 0116490730020062, மணச்சநல்லூர் திருச்சி, 0120720700061053, 2580, 2605, 2874, 2881, 4006, 5520, 5524, 0120720730017808, 8349, 2850, 2851, மேல்சிந்தாமணி, 0119010700046244, 7868, முசிரி திருச்சி, 0115200700054747, 8982, 9418, 9434, 0868, 0872, 0874, 0115200730019806, 9819, பொன்மலை, 0113600700044302, 4414, 5160, புள்ளம்பாடி திருச்சி, 0121230700059232, 9375, 9529, 2133, 2788, 3384, 3534, 5439, 0121230730011754, 3461, 6851, 6852, 6853, 6855, 6857, 6858, 6859, 0271, ஸ்ரீநிவாச நகர் திருச்சி, 0116060700042475, 5069, 5070, 0116060730018262, 9625, சுப்ரமணியபுரம் திருச்சி, 0103120700080378, 1102, கந்தர் நகர் திருச்சி, 0113980700029591, 1687, 1977, 3246, 0113980730022334, 2339, தாத்தையங்கார்பேட்டை, 0125050700042814, 3082, 0125050730016033, திருவானைக்கோயில் திருச்சி, 0115110730022177, 2178, 2180, தொட்டியம், 0126670700068644, 9112, 9824, 1951, 1962, 1963, 0126670730023045, 6555, 0568, 0576, துறையூர், 0111610700048557, 8695, 0111610730017010, 7015, 7016, 7025, 7031, 7032, துவரங்குறிச்சி, 0120170700033579, 4528, 4642, 0120170730008122, 0146, திருச்சி டோல்கேட், 0124750700039362, 9916, 9936, 9938, 1103, 0124750730018516, 8523, உப்பிலியபுரம் திருச்சி, 0121130700061649, 1727, 1944, 3243, 4062, 4382, 4579, 4589, 4815, 4857, 4927, 4969, 5170, 5189, 5191, 5199, 5360, 5436, 5470, 6369, 8024, 0121130730022540, வையம்பட்டி திருச்சி, 0117050700047122, 7179, 7625, 7627, 0117050730007770, 8159, 8753,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

வாகனம் விற்பனைக்கு
TN45CB9135
TVS AUTO KING DELUXE
BS6 LPG P & 2022
9566769935

தமிழ்நாடு கனிம நிறுவனம்
(தமிழ்நாடு அரசு நிறுவனம்)
எண்.31, காமராஜர் சாலை, லேபர்கம்., சென்னை-600005. தொலைபேசி: 044-28415003, 28511972

இ – ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம்

1	பணியின் பெயர்	டாமின் நிறுவனத்திற்குட்பட்ட சில கிராணைட் குவாரிகளிலிருந்து வழங்கப்படும் கற்துண்டங்களை கிராணைட் கற்பலகைகளாக (Slabs) உற்பத்தி பணி
2	ஒப்பந்தப்புள்ளி எண்./ நாள் ஒப்பந்தப்புள்ளி id எண்.	86/விஸி-1/2026, நாள்-27.07.2026 2026_TNMIN_688937_1
3	இ-ஒப்பந்தப்புள்ளி தாக்கில் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	27.08.2026 பிற்பகல் 4.00 மணி வரை
4	இ-ஒப்பந்தப்புள்ளி தாக்கில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் விலைப்புள்ளி திறப்பு பற்றிய விவரம்	28.08.2026 பிற்பகல் 4.00 மணி பின்னர் தெரிவிக்கப்படும்
5	ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை & முன் வைப்புத் தொகை	ரூ.2360/- (ரூபாய் இரண்டாயிரத்து முன்னூற்று அறுபது மட்டும்) ரூ.1,18,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து